This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

www.writersujatha.com

# மூன்று நாள் சொர்க்கம்

1

**எ**ன் பெயர் குருராஜ். குரு என்றே என்னைக் கூப்பிடலாம். நான், ராஜ், மனோ—மூவரும் மங்களூர் போயிருந்தோம்.

அதைப் பற்றிச் சொல்கிறேன்.

2

**ஐ**டியா கொடுத்ததே மனோதான். அவன்தான் ஒரு மாதிரி. எங்கள் குழுவின் தலைவன் ரா**ஜு**க்குத் தெரிந்த பார்ட்டி ஒன்று மங்களூரில் இருப்பதாகவும், ஆட்டோ மொபைல் ஸ்போர்ட் பெரிய புள்ளி என்பதாகவும், அந்தப் புள்ளி பைபாஸ் ஆபரேஷனுக்கு அமெரிக்கா பேவதாகவும், அதனால் அவர்கள் மாளிகை போன்ற வீட்டைப் பாதுகாக்க ராஜை அழைத்திருப்பதாகவும், அவனுடன் போய் மூன்று நாளாவது இருக்கலாம் என்றும் சொன்னான். ஆயிரம் ரூபாய் பணம் கட்டாயம் கொண்டுவரச் சொன்னான். "ஆயிரம் ரூபாயா? அஞ்சு ரூபாய்க்கு சிங்கியடிக்கிறேன் மனோ" என்றேன்.

"திருடு" என்றான்.

"எப்படி" என்றேன்.

“திருடுவதற்குச் சொல்லியா தரவேண்டும். உங்கள் வீட்டில் டிரான்சிஸ்டர் இல்லையா, டேப்ரிக்கார்டர் இல்லையா, குட்டி குட்டியாக வெள்ளிப் பாத்திரங்கள் இல்லையா, நகை இல்லையா? வீட்டில் திருடுவதைப் போல பத்திரமானது எதும் இல்லை. குரு, உன்னை யாரும் சந்தேகிக்கவே மாட்டார்கள்" என்றான்.

"எங்கள் வீட்டு ட்ரான்ஸிஸ்டர் எல்லாம் திருடக்கூடிய நிலையில் இல்லை. எல்லாம் எம்ராய்டரி போட்டு ஜோடித்து அலமாரியில் எலிமினேட்டருடன் இணைத்து, ரொம்ப கஷ்டம் மனோ."

"அப்ப எதித்த வீட்டில பக்கத்து வீட்டல திருடு. பால்காரன் வீட்டில் எத்தனையோ இறைஞ்சு கிடக்காது? தபாரு குரு, சொர்க்கம் பார்க்கணுமா, மூணு நாள்ல ரூபா ஆயிரத்தோட வா. எப்படி சம்பாதிப்பயோ தெரியாது. டென்னிஸ் ஆடலாம், பென்னி சாப்டலாம். வேணும்னா கோவா போலாம். சக்கரை சாப்டலாம், ஊதலாம். குட்டிகளோ ஏராளம்" என்றான்.